O.S. 79/2020

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:22.10.2024

DW2: சதீஸ்குமார் த/பெ– கணேசன்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் சிவகாசி தாலுகா, விஸ்வநத்தத்தில் வசித்து வருகிறேன். நான் பில்டிங் கட்டும் தொழில் செய்து வருகிறேன். சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. 3ம் பிரதிவாதி சொன்னதின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி சொல்லி தான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் 3ம் பிரதிவாதி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து மூளிப்பட்டி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் நான் குடியிருக்கவில்லை. மூளிப்பட்டி கிராமத்திற்கும் எங்கள் ஊருக்கும் சுமார் 25 கிமீ தூரம் இருக்கும். தாவா சொத்தில் யார் விவசாயம் செய்கிறார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் தெரியும், 3ம் பிரதிவாதி விவசாயம் செய்து வருகிறார். தாவா சொத்து மூளிப்பட்டி ஊர் கடைசியில் உள்ளது. அதன் சர்வே எண், நான்குமால் தெரியாது. தாவா சொத்திற்கு நான் சென்றதே கிடையாது என்றும், 3ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதினால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது வயது 32. எனது நிரூபண வாக்குமூலத்தில் 1ம் வாதி சீனிவாசன், உடன் பிறந்த சகோதரி ஜெயலட்சுமி, 2ம் வாதி உதயசூரியன் ஆகியோர்களுக்கு கார்டியனாக இருந்து காந்தியம்மாள், சீனிவாசன் ஆகியோர்கள் 2ம் பிரதிவாதி லட்சுமியம்மாள் என்பவருக்கு கடந்த 20.04.1985ல் கிரையம் எழுதிக்கொடுத்த விபரம் எனக்கு தெரியாது.

மேற்படி விபரங்கள் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 21.11.2019ம் தேதியன்று சிவகாசி தாலுகா ஆனைக்கூட்டம் வடக்கு தெரு முத்துராஜ் என்பவருக்கு லட்சுமியம்மாள் கிரையம் எழுதிக்கொடுத்த விபரம் 3ம் பிரதிவாதி சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். 21.02.2020ல் முத்துராஜ் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்த விபரம் 3ம் பிரதிவாதி சொல்லி தான் தெரியும் என்றால் அதை பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது. தாவா சொத்தை பற்றி எனக்கு தெரியாது என்றும், 3ம் பிரதிவாதி எனது நண்பர் அவருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.